# தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் சுகாதாரத் தொழிற்சங்கங்கள் கடும் எச்சரிக்கை!

## வரும் வியாழனன்று அடையாளப் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 31

ஊடகங்களுக்கு தகவல்களை வெளியிட வேண்டாம், என சுகாதார அமைச்சின் செயலாளரினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் வியாழக்கிழமை மாபெரும் அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை முன்னெடுக்க சுகாதாரத் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

சுகாதார வல்லுநர்கள் சம்மேளனத்தின் தலைவர் ரவி குமுதேஷ் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

சுகாதாரத்துறை தொடர்பான சில தீவிரமான கவலைகளைக் களைவதற்கு போதுமான கால அவகாசம் இருந்தபோதிலும், சுகாதார அதிகாரிகள் அவற்றை நிவர்த்தி செய்யத் தவறியுள்ளனர்.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, மருந்துகள் தட்டுப்பாடு, மருந்துகளின் தரம் போன்ற பாரதூரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, எதிர்வரும் வியாழக்கிழமை வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கவுள்ளோம், என்று அவர் மேலும் தெரிவித்தார். (மி)


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 14 திங்கட்கிழமை 31.07.2023 கதிர் 40



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## மீண்டும் ரணிலை ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்போவதில்லை மொட்டுக் கட்சியின் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் மட்டுமே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் மட்டுமே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமெனநாம்அவருக்கு அழைப்பு விடுக்கிறோம்.

பொதுமக்களே! நீங்கள் மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவானவர்கள் ஆயின், இப்போதே தயாராகுங்கள். 2024 ஆம் ஆண்டில் நாம் 2➤

## மீண்டும் செயலிழந்த குமுதினிப் படகு!



யாழ்ப்பாணம் குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவுகளுக்கு இடையிலான குமுதினிப் படகுச் சேவை இயந்திரக் கோளாறு காரணமாக மீண்டும் 2➤

## மீண்டும் ஓர் கறுப்பு ஜூலைக்கு வித்திடும் அரசாங்கம் - இரா.சாணக்கியன் கருத்து

இலங்கை அரசாங்கம் மீண்டும் ஓர் கறுப்பு ஜூலைக்கு வித்திடுகின்றது, என தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரம் இல்லாத அதிகாரப் பரவலாக்கலில் தாம் எவ்வாறு மக்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து பாதுகாக்க முடியும்? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். 2➤



## மொரட்டுவை பல்கலை மாணவர்களுக்கு கேரள கஞ்சா விற்ற இளைஞர் சிக்கினார்

மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கேரள கஞ்சா விற்பனை செய்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகள் முடிந்து செல்லும் வழியில் சந்தேகநபர் சில காலமாகக் கேரள கஞ்சாவை விற்பனை செய்து வந்துள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், சந்தேகநபரிடமிருந்து கேரள கஞ்சாப் பொட்டலங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபர், மொரட்டுவை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (O3)

## சமஸ்டியை வலியுறுத்தி மட்டக்களப்பில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு!



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய 100 நாட்கள் செயல் முனைவின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு, வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் முன்வைக்கப்பட்ட சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை உறுதி செய்யக் கோரி இன்றைய தினம் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று காலை காந்திப் பூங்காவில் குறித்த கவனவீர்ப்பு 2➤

## தீர்வை நோக்கிய பயணத்துக்கு வலுச் சேர்க்க யாழில் போராட்டம்



வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வுப் பயண 100 நாள் செயற்பாட்டின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா 2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# கையடக்கத் தொலைபேசிகளால் மாணவர்களுக்கு கடும் ஆபத்து!

## மனநல மருத்துவர் ரூமி ரூபன்



பாடசாலைக் கல்வியில் கையடக்க தொலைபேசிகள் உள்ளிட்ட பிற தொழில்நுட்ப கருவிகளை அதிகளவில் பயன்படுத்துவதன் காரணமாக, மாணவர்கள் செயன்முறை ரீதியான கல்வியில் இருந்து விலகும் அபாயம் ஏற்படுவதாக மனநல மருத்துவ நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளில் கையடக்கத் தொலைபேசிப் பாவனையைத் தடை செய்ய வேண்டும் என யுனெஸ்கோ அமைப்பு அண்மையில் பரிந்துரைத்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த யுனெஸ்கோ, பாடசாலைகளின் கையடக்க தொலைபேசியை பயன்படுத்துவதைத் தடைசெய்யுமாறு சிறப்பு அறிக்கையை சமீபத்தில் சமர்ப்பித்துள்ளது.

கொவிட் தொற்றுநோயின் பின்னர், பாடசாலைகளில் கையடக்கத் தொலைபேசிப் பயன்பாடு, பாடசாலை நேரம் முடிந்த பின்னரும் கைத்தொலைபேசிகளின் பயன்பாடு மற்றும் பல்வேறு வகையான தொழிநுட்ப சாதனங்களின் பயன்பாடுகள் மாணவர்களிடையே அதிகரித்துள்ளன.

புத்தகம் படிக்கும் நேரமும் ஆசிரியர்களுடன் இருக்கும் நேரமும் குறைவடைந்துள்ளது.

ஒரு திரையில் தங்கள் வாழ்க்கையில் அதிக நேரத்தை செலவிடுவதால், அவற்றுக்கு விரைவில் அடிமையாகிவிடும் நிலை உள்ளது. இது குழந்தைகளின் மன ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது ,என்றும் அவர் எச்சரித்துள்ளார். (மி)

# தேர்தலை நடத்தும் தீர்மானத்துக்கு கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும்

## எஸ்.எம்.மரிக்கார் கோரிக்கை

நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை கொண்டு வருவது குறித்து, ஐக்கிய மக்கள் சக்தி இன்று சுட்டிக்காட்டியதுடன், இதற்கு ஆதரவளிக்குமாறு ஏனைய கட்சிகளையும் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார், பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தில் கையொப்பமிட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உட்பட சபையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தயாராக இருக்க வேண்டும் என ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எதிர்காலத் தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றிபெறும் என்று தெரிவித்திருந்தார். எனவே, சபையைக் கலைத்து பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் தீர்மானத்தை ஆதரிக்குமாறு அவருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் நாங்கள் சவால் விடுக்கின்றோம், என மரிக்கார் கூறினார்.

நாடாளுமன்றம் இன்று குழப்பமடைந்துள்ளதோடு மக்களின் விருப்பத்தை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. எனவே, அது கலைக்கப்படுவதே சிறந்தது. யாருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கலைப்புக்கான தீர்மானத்தை உங்களது கட்சி கொண்டுவருமா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர், எங்கள் அரசியல் வியூகங்களை நாங்கள் முன் கூட்டியே வெளிப்படுத்தவில்லை, எனப் பதிலளித்தார்.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்திய உயர்ஸ்தானிகர் சந்திப்பு நாளை கொழும்பில் நடைபெறவிருக்கிறது

*இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புற்கும் இடையில் நாளை செவ்வாக் கிழமை காலை 10.30 மணிக்கு சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொழும்பில் உள்ள இந் திய இல்லத்தில் இந்திய உயர் ஸ்தானிகர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.*

*இந்தச் சந்திப்பில் 13 ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடி வெளியிட்ட கருத்துக்கள், சர்வகட்சிக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் பொன்றவை குறித்து விவாதிக் கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.*

## இலங்கையில் ஐஸ் போதைப்பொருள் பாவனையாளர்கள் அதிகரிப்பாம்!

ஐஸ் போதைப்பொருள் பயன்பாடு குறித்த தேசிய கணக்கெடுப்பின் ஆரம்பக் கண்டுபிடிப்புகள் மூலம், நாட்டில் சுமார் 50,000 பேர் ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது என தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் ஷக்ய நாணயக்கார தெரிவித்தார்.

இருப்பினும், எங்கள் மாதிரிகள் மற்றும் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகள் மூலம், பாடசாலைகளில் ஐஸ் போதைப்பொருள் பயன்பாடு என்பது நாம் பயப்படுவது போல் பரவலாக இல்லை என்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம் எனவும் நாணயக்கார தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் எங்கள் புனர்வாழ்வு மையங்களில் அனுமதிக்கப்பட்ட நபர்களில் ஒப்பீட்டளவில் அதிகரிப்பு ஏற்பட்டது, எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மி)

## தீர்வை நோக்கிய பயணத்துக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது பொதுமக்களுக்கு வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் தயாரிக்கப்பட்ட மக்கள் பிரகடனப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. (03)

## சமஸ்டியை வலியுறுத்தி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டம், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் மட்டக்களப்பு இணைப்பாளர் ஜெ.கோபிநாத் தலைமையில் இடம்பெற்றது.

இக்கவனவீர்ப்புப் போராட்டத்தில், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதான இணைப்பாளர் க.லவகுசராசா உட்பட சிவில் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டித் தீர்வினைக் கோருகின்ற வகையிலான கோசங்கள் முன்வைக்கப்பட்டு, பதாதைகளை ஏந்தியவண்ணம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் 100 நாட்கள் செயல் முனைவில் மக்களினால் முன்வைக்கப்பட்ட 16 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மக்கள் பிரகடனமும் வெளியிடப்பட்டிருந்தது. (க)

## மீண்டும் செயலிழந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலிழந்துள்ளது.

சில மாதங்களாக குமுதினி படகு பழுதடைந்த நிலையில் பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர். இதனால், யாழ்.தீவுகளுக்கு இடையிலான போக்குவரத்து நடவடிக்கைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இதனையடுத்து, 70 இலட்சம் ரூபா செலவில் குமுதினிப் படகை போக்குவரத்திற்கு தயார்ப்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

படகு திருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அதனை கடலுக்குள் இறக்குவதற்கான நடவடிக்கையும் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, படகுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, ஐந்து தடவை பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டது.

படகினை மீளச் செலுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில், படகினை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிகழ்வு ஆரம்பமாவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னதாக படகினை இயக்கி, குறிக்கட்டுவான் இறங்குதுறைக்கு கொண்டு செல்லும்போது திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டு செயலிழந்தது.

இந்த நிலையில், படகின் செயலிழந்த இயந்திரப் பகுதி, திருத்தப் பணிக்காக நீர்கொழும்புக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாணப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

## மீண்டும் ஓர் கறுப்பு ஜூலைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு துறைநீலாவணை தமிழரசுக் கட்சியின் வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை தின நிகழ்வு நேற்று மாலை, வட்டாரக்கிளையின் தலைவர் த.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஜூலைக் கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில் மற்றும் தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணித்தலைவர் உட்பட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (க)

## மீண்டும் ரணிலை ஜனாதிபதியாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் மஹிந்த ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டு வருவோம், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள். எங்களுக்கு வேறு கட்சிகள் கிடையாது. கூட்டாட்சியை நாட்டிலிருந்து இல்லாது செய்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நான் இவ்வேளையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரம், 2024 ஆம் ஆண்டுவரைதான் நாம் அவரை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

2024 இலிருந்து 2029 வரை நாம் அவரை ஜனாதிபதியாக்கப் போவதில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் மட்டும், பேச்சுவார்த்தை நடத்துமாறு நாம் அவருக்கு அழைப்பு விடுக்கிறோம்.

ஏனைய தரப்பினருடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி, தோல்வியடைய வேண்டாம் என்றும் நாம் ஜனாதிபதிக்கு தெரிவித்துக் கொள்கிறோம், எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கெஹலியவிற்கு எதிரான பிரேரணை கூடவுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழு கூடவுள்ளது.

குறித்த கலந்துரையாடல் இந்த வாரம் நடைபெறும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து விரைவில் விவாதம் நடத்துமாறு சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



# தமிழகத்திற்கு ஏதிலிகளாகச் சென்றுள்ள இலங்கையர்கள்!

தமிழகம் தனுஷ்கோடியில் இலங்கையர்கள் நால்வர் ஏதிலிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக புகலிடம் தேடி வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் அகதிகளாகப் படகில் புறப்பட்டு, தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையை இன்று திங்கட்கிழமை காலை சென்றடைந்துள்ளனர்.

தகவல் அறிந்த தமிழக கடற்படையினர் அவர்களை மீட்டு, மண்டபம் கடலோர காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தஞ்சமடைந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகள் என தெரியவந்துள்ளது.

அண்மைய நாட்களில், பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் சென்றவர்களின் எண்ணிக்கை 269 ஆக உயர்ந்துள்ளது.

# வன்னேரி, தேவன் கட்டுக் குளங்களின் அணைக்கட்டு புனரமைப்பு ஆரம்பம்



300 மில்லியன் ரூபா செலவில் காலநிலைக்கு சீரமைவான விவசாயத் திட்டத்தின் (சியாப்) கீழ் வன்னேரிக்குளம் மற்றும் தேவன் கட்டுக் குளங்களின் அணைக்கட்டு புனரமைப்பு வேலைத்திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் க.கருணாநிதி கலந்துகொண்டு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் அதிகளவு நன்மையடையவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# அட்டாளைச்சேனை குர்ஆன் மதரஸாவின் பட்டமளிப்பு விழா

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை, ஜூலை31

அட்டாளைச்சேனை யு.கே. இஸ்மாயில் பவுண்டேஷன் அமைப்பினால் நடத்தப்பட்டு வந்த குர்ஆன் மதரஸாவின் பட்டமளிப்பு விழா அந்த அமைப்பின் தலைவர் கே எம். சுபைர் தலைமையில் அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலை கேட்பார் கூடத்தில் நேற்று 30 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில், கற்கை நெறிகளை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஏ.சி.முகம்மது மௌலவி அவர்களும் ஏனைய அதிதிகளாக யூ.எல்.எம். நியாஸ் மௌலவி, எம்.நசீர் மௌலவி மற்றும் அமைப்பின் செயலாளர் ஆசிரியர் எஸ்.சுலைமாலெப்பை, மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.






# பாலஸ்தீன அகதிகள் முகாமில் மோதல் - 6 பேர் உயிரிழப்பு!



பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் மஹ் மூத் அப்பாஸின் பதா இயக்கத்திற்கும் இஸ்லாமிய குழுக்களுக்கும் இடையே மோதல்கள் வெடித் துள்ளன. இந்த மோதல்களில் பாலஸ்தீன அகதிகள் முகாமும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இதில் ஆறு பேர் இறந்து, பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்த ஆறு பேரில் ஒரு பதா இயக்கத் தளபதியும் உள்ளடங்குவதாக அந்த அமைப்பு உறுதிப் படுத்தியுள்ளது.

குறித்த முகாம் 1948 இல் நிறுவப்பட்ட தாகவும், அது, 63,000க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட அகதிகளுடன் கூடிய மிகப்பெரிய முகாம் எனவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

தெற்கு நகரமான சிடோனுக்கு அருகில் அமைந்துள்ள இந்த முகாம், லெபனான் பாதுகாப்புப் படைகளின் அதிகார வரம்பிற்கு வெளியே உள்ளது.

இதனையடுத்து, லெபனானில் உள்ள பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் இயக்குநர் டோரோதிக்ராஸ், முகாமில் உள்ள அனைத்து உதவி நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

மோசமான வாழ்க்கை நிலைமைகளைக் கொண்ட பாலஸ்தீன நாட்டில், 12 அகதிகள் முகாம் களில் மொத்த மக்களில் பாதிப் பேர் வாழ்வதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (மி)



# சீனாவில் டோக்சுரி புயலினால் தாக்கம்

சீனாவின் பல மாகாணங்களில் டோக்சுரி புயல் தாக்கியதன் காரணமாக 178 வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

சீனாவின் புஜியான் மாகாண கடற்கரை அருகே புயல் கரையை கடந்தபோது பெய்த கனமழை காரணமாக, அங்கு கடும் வெள்ளப பெருக்கு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புயலின் காரணமாக 178 வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளதோடு, பயிர்களும் நீரில் மூழ்கி அழுகியுள்ளன. இதன்மூலம், அங்கு 493 மில்லியன் அளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக சீன அரசாங்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, வெள்ளத்தால் 8 இலட்சத்து 80 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)

# ஓடும் ரயிலில் துப்பாக்கிச் சூடு பயணிகள் பலர் உயிரிழப்பு!



ஜெய்ப்பூர் - மும்பை எக்ஸ்பிரஸ் ரயிலில், ரயில்வே பாதுகாப்புப் படை வீரர் துப்பாக்கியால் சுட்டதில் பயணிகள் பலர் உயிரிழந்ததாக சொல்லப்படுகிறது.

ரயில் எண் 12956 கொண்ட ஜெய்ப்பூர் எக்ஸ்பிரஸ் மும்பை நோக்கி சென்று கொண்டிருந்த நிலையில் இன்று காலை பல்கார் ரயில் நிலையத்தை தாண்டி சென்றபோது, ரயில்வே பாதுகாப்பு படை வீரர் ஒருவர் திடீரென தனது துப்பாக்கியை எடுத்து ரயில்வே பாதுகாப்பு படையின் மற்றொரு துணைக் காவல் ஆய்வாளரை நோக்கிச் சுட்டுள்ளார்.

அதன்பிறகு 3 பயணிகள் மீதும் துப்பாக்கிச்சூட்டை அவர் நடத்தியதாகத் தெரிகிறது. இதையடுத்து ஓடும் ரயிலில் இருந்து வெளியில் குதித்து அவர் தப்பிச் சென்றுள்ளார்.

இதுபற்றி ரயில்வே பொலிசாருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது. உடனடியாக அருகிலுள்ள ரயில் நிலையத்தில் ஜெய்ப்பூர் எக்ஸ்பிரஸ் நிறுத்தப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் சுடப்பட்ட 4 பேரும் உயிரிழந்ததாகச் சொல்லப்படுகிறது.

ரயில் பெட்டி ரத்தக் கறையாக காட்சி அளித்து, சக பயணிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அனைவரும் அச்சத்தில் உறைந்தனர். தகவலறிந்து வந்த ரயில்வே பொலிசார், குற்றவாளியைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

சில மணி நேரத்தின் பின்னர், துப்பாக்கிச்சூட்டை நடத்திய ரயில்வே பாதுகாப்புப் படை வீரர் கைது செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஓடும் ரயிலில் நடந்த துப்பாக்கிச்சூடு, அதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த உயிரிழப்புகள் வட இந்தியாவில் மட்டுமின்றி ஒட்டுமொத்த இந்தியாவையுமே பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது. (கோ)

# இங்கிலாந்து தீம் பார்க்கில் சிக்கிய ரோலர்கோஸ்டர்

இங்கிலாந்தில் எசெக்ஸ் கவுண்டி கவுன்சிலில் தென் முனைப் பிராந்தியத்தில் உள்ள பொழுது போக்கு பூங்காவில் பிரம்மாண்ட ரோலர்கோஸ்டர் ஒன்று பயன்பாட்டில் இருந்து வருகிறது.

அந்த ரோலர்கோஸ்டரில் 8 பேர் பயணம் செய்த போது, திடீரென சுழலாமல் மாட்டிக் கொண்டது. கிட்டதட்ட தலைகீழாக தொங்கியது போன்ற நிலைக்கு வந்துவிட்டது. இவர்களில் அதில் இருந்தவர்களில் 8 வயதுக் குழந்தையும் அடங்கும். தொழில்நுட்ப கோளாறு காரணமாக பல நிமிடங்கள் ரோலர்கோஸ்டர் நகரவில்லை. உடனே மீட்பு குழுவினருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது. அவர்கள் விரைந்து வந்து ரோலர்கோஸ்டரை நகர்த்துவதற்கு போராடினர். இருந்தும் ரோலர்கோஸ்டரை நகர்த்த முடியவில்லை.

பல மணி நேரப் போராட்டத்தின் பின்னர் மாட்டிக் கொண்ட 8 பேரையும் அவர்கள் பத்திரமாக மீட்டனர். அடுத்த சில நிமிடங்களில் ரோலர் கோஸ்டரில் இருந்த தொழில்நுட்ப பிரச்சினையையும் தீர்த்துவிட்டனர்.

இது தொடர்பாக பேசிய பொழுதுபோக்கு பூங்காவின் தாய் நிறுவனமான ஸ்டாக்வல்யூ குழுமத்தின் மேலாண் இயக்குநர் மார்க் மில்லர், எங்களின் திறன் வாய்ந்த குழுவினர் மீட்புப் பணிகளை வேகமாக மேற்கொண்டனர். இவர்கள் தேசிய அளவில் சிறப்பான பயிற்சி பெற்றதற்கான சான்றிதழைப் பெற்றுள்ளனர்.

சரியாக 40 நிமிடத்தில் பொதுமக்கள் மீட்கப் பட்டனர். அனைவரும் அவர்களது குடும்பத்தினருடன் சேர்த்து வைக்கப்பட்டனர்.

# 12 ஆவது பிறந்த நாளில் ஓய்வுபெறும் அவுஸ்திரேலியா கோடீஸ்வரச் சிறுமி



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிக்ஸி கர்டிஸ் என்ற சிறுமி, பிக்ஸியின் பிட்ஜெட்ஸ் என்ற பொம்மை நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார்.

இளம் கோடீஸ்வரராக இருக்கும் பிக்ஸி, தற்போது ஒவ்வொரு மாதமும் 133,000 அமெரிக்க டொலர்களுக்கு மேல் சம்பாதிக்கிறார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் பிக்ஸியின் தாய், ராக்ஸி ஜசென்கோ தனது மகளுக்கு 12 ஆவது பிறந்தநாளில் ஒய்வு விழாவைத் திட்டமிடும் யோசனையை வழங்கி உள்ளார். வாழ்க்கையில் கல்வியின் முக்கியத்துவம் குறித்து தனது மகளுக்கு அவர் உணர்த்தியுள்ளார்.

எனவே, தற்போது படிப்பில் கவனம் செலுத்துவதற்காக பிக்ஸி தனது தொழிலில் இருந்து விலகி இருக்கிறார். இது குறித்து ஒரு காணொளியையும் அவர் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார்.

அவர் தனது பிறந்தநாள் விழாவின் போது, விருந்தினர்களுக்கு 50 டொலர்களுக்கு மேலான மதிப்புள்ள அழகு சாதனப் பொருட்கள் அடங்கிய பைகளை பரிசாக வழங்கி உள்ளார்.

பிக்ஸி கர்டிஸ் கொரோனா காலகட்டத்தின் போது பிட்ஜெட் ஸ்பின்னர் வணிகத்தைத் தொடங்கினார். தற்போது, அவர் அடிக்கடி தனது ஆடம்பரமான, விலையுயர்ந்த வாழ்க்கை முறையை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்து கொள்கிறார், அவருக்கு இன்ஸ்டாவில் 130,000 க்கும் மேற்பட்ட பின் தொடர்பவர்கள் உள்ளனர்.

அந்த பணக்காரச் சிறுமி, மெர்சிடிஸ் பென்ஸ் கார் ஒன்றை வைத்திருந்தாலும், அவரால் சட்டப்பூர்வமாக வாகனம் செலுத்த முடியாது. விலை உயர்ந்த கார் அவரது பத்தாவது பிறந்தநாளில் அவரது தாயிடமிருந்து பரிசாகக் கிடைத்தது. எனினும் இன்ஸ்டாவில் சில பயனர்கள் பிக்ஸியின் ஆடம்பர வாழ்க்கை முறை பற்றியும் கவலை தெரிவித்து வந்துள்ளனர்.

போய் குழந்தையாக இருங்கள். நீங்கள் வயது வந்தவராக இருக்க முயற்சிப்பதைத் தவிர்க்கலாம், என்று அவர்கள் கருத்துப் பதிவிட்டு வந்திருக்கின்றனர். (கோ)

# பாகிஸ்தான் அரசியல் கட்சிக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு - பலி எண்ணிக்கை 44



பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள பஜார் மாவட்டத்தில் இஸ்லாமிய அரசியல் கட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், எதிர்பாராத விதமாக திடீரென குண்டுவெடிப்பு நடைபெற்றது.

இந்த அநர்த்தத்தில் 35 பேர் உயிரிழந்ததாகவும், 150 பேர் படுகாயமடைந்ததாகவும் முன்னர் தெரிவிக்கப்பட்டது. தற்போது, குண்டுத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்துள்ளதாக பாகிஸ்தானிய செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்கொலைப் படைத் தாக்குதல் மூலம் இந்தச் சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (மி)

# நலன்புரிக் கொடுப்பனவு வங்கிக் கணக்கு ஒப்படைக்கச்சென்ற மக்கள் பெரும் சிரமம்







நலன்புரிக் கொடுப்பனவைக் பெறுவதற்காக, வங்கிக் கணக்கிலக்கத்தினை ஒப்படைப்பதற்காக கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் திரண்டிருந்த மக்கள், தாம் பெரும் அவதிக்கு உள்ளானதாகத் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை 5 மணி தொடக்கம் நீண்ட வரிசையில் காலை உணவுகூட அருந்த முடியாத நிலையில் தாம் காத்திருக்க நேர்ந்ததாகவும், முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களையும் ஈவிரக்கமின்றி அதிகளவான நேரம் காக்க வைத்ததாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நலன்புரிக் கொடுப்பனவைப் பெறுவதற்காக வங்கிக் கணக்கிலக்கங்களை ஒப்படைக்க வருவோருக்கு, இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறாது இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (02)





## அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீ வடபத்திர காளியம்மாள் தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீ வடபத்திர காளியம்மாள் ஆலயத் தேர்த் திருவிழா பக்தர்கள் சூழ இன்று சிறப்புற இடம்பெற்றது.

கடந்த 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்த திருவிழாவில் இன்று பத்தாம் திருவிழாவாக காளியம்மாள் திருத்தேதுரறி பக்தர்களுக்குக் காட்சியளித்தார்.

# ரஷ்யா - உக்ரைன் யுத்தம் இன்னும் சிலவாரங்களில் முடிவுறும்! - ஜெலன்ஸ்கி

ரஷ்யா தொடங்கி வைத்த யுத்தம் படிப் படியாக ரஷ்யாவுக்கே திரும்புவதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். அது இயல்பானது, தவிர்க்க முடியாதது எனவும் அவர் கூறியுள்ளார்.

மொஸ்கோ மீது உக்ரைனின் ட்ரோன் கள் மூன்று தடவை தாக்குதலை நடத்திய தில் இரண்டு அலுவலகக் கட்டங்கள் தீப் பிடித்துச் சேதம் அடைந்ததாக உக்ரைன் அறிவித்தது. அதே நேரம், ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்தது. இந்தத் தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏற்படவில்லையென்றாலும், மொஸ்கோ முழுவதும் விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டதோடு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ரஷ்யா யுத்தம் தொடங்கி 522 நாட்களான நிலையில், யுத்தக் களத்தில் ரஷ்யா திவாலாகி விட்டது, என ஜெலன்ஸ்கி குறிப்பிட்டிருக்கிறார்.

இன்னும் ஓரிரு வாரங்களில் ரஷ்யா வின் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்றும் ஜெலன்ஸ்கி நம்பிக்கை வெளி யிட்டுள்ளார். (மி)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.07.2023இல் வெளியிடப்பெற்றது.